# போகும் வழி.. தூரம் இல்லை

அனல் தணிந்த இரவு
மனல் காற்று வீசும் - வானை
அண்ணாந்து பார்த்த வண்ணம்
பாலைவனத்தில் மூவர் பயணம்

எங்கே.. எங்கே..

இறைமகன் பிறந்த
இடம் காட்ட முளைத்த
வால்வெள்ளி எங்கே !
மூன்று சோடி கண்கள்
நட்சத்திர கடலில் தொலைத்த
முத்தை தேடும்
கண்கள் களைக்கும்
அவநம்பிக்கை ரேகைகள்
அவர்கள் முகத்தில் படரும்

வான் கிளிக்கும் மின்னலில்
வானதூதர் பாடுவார்

"உன்னதத்தில் கடவுளுக்கு
மாட்சி உரித்தாகுக !
உலகில் அவருக்கு உகந்தோருக்கு
அமைதி உண்டாகுக !"

வால்வெள்ளி வானில் தோன்றும்
அதன் வழியில் பயணம் தொடரும்
நம்பிக்கை மீண்டும் தளைக்கும்

மணல் காற்று புயலாய் மாறும்
ஓரடி நகராமல் ஒட்டகங்கள் தடுமாறும்
ஆகாய மேடையை மேகத்திரை மூடும்
வழி காட்டிய வெள்ளி காணாமல் போகும்

தடம் தெரியாமல் தடுமாறும் உள்ளம்
திசை தெரியா இடம் வேண்டாம்
திரும்பி போ ! என்கும் எண்ணம்
வழியுரைத்த வால்வெள்ளி மேல்
பழியுரைப்பார் பாலைவனத்தில் மூவரும்

மணல்காற்று மௌனமாகும்
தணலென தோன்றும் வால்வெள்ளி
பரவசம் கொண்டு பயணிப்பார்
பரமன் மகனை பெத்லேகமில் தரிசிப்பார்

மீட்பரை வழிபட்டு
விழி உயர்த்தி பார்ப்பார்கள் வானை
வழி காட்டிய வால்வெள்ளி
ஒளி கூட்டிச் சொல்லும்

"வழிகாட்டி மேல் நம்பிக்கை கொள்
நீ போகும் வழி து(ா:ய)ரம் இல்லை.



மகேசன், 18.11.04

லூக்கா 7:1-10



ஒரு வார்த்தை..

கப்பர்நாம் நகரில்
கனைத்து ஓய்ந்தன குதிரைகள்
உரோமாபுரித் தளபதி
முகாம் முற்றத்தில் நின்று
உற்றுப் பார்த்தான்

இயேசு இன்னும் வரவில்லை

படைகொண்டு பகை அழித்த
நிமிர்ந்த தோள் - இன்று
வில்போல் வளைந்திருந்தது

போ என்றால்
போர்க்களம் செல்லும் வீரர்கள்
ஒருதரம் கை தட்டலுக்கே
ஓடிவரும் பணியாட்கள் இருந்தும்
ஒரு வார்த்தைக்காய் காத்து நிற்கிறான்

இயேசு இன்னும் வரவில்லை

கவலை கண்ணீராய் வெளியேறியது
காலமெல்லாம் அவனுக்காய்
காவலாய் இருந்த பணியாளன்
பிணியுற்று இன்று படுக்கையில்
மருத்துவர் பிளைப்பான் என்பதை
மறுத்துவிட்டனர்
தளபதி நம்பிக்கை தளரவில்லை
ஒரு வார்த்தைக்காய் காத்து நிற்கிறான்

அமைதியாய் இருந்த அத்திமரங்கள்
அல்லேலூயா இசைக்க
இரு கால்கள் நிலத்தில் ஊன்றி
இரு கால்கள் கைபோல் கூப்பி
எழுந்து நின்று குதிரைகள் கனைக்க

வருகிறார்.. இயேசு வருகிறார்

கண்ணீர் துடைத்து
கானல்நீர் நிறை வீதியில்
இயேசுவின் வருகை கண்டு
தளபதி நண்பர்களை அழைத்தான்

நான் சொல்வதை
இயேசுவிடம் கூறுங்கள் என்றான்

தளபதியின் தகவலை
இயேசுவை வீதியில் மறித்து உரைத்தனர்

"இயேசுவே..
என் வீட்டில் நீர் அடியெடுத்து வைக்க
நான் தகுதியற்றவன்
உம்மிடம் வரவும் நான் தகுதியற்றவன்
ஆனால்..
ஒரு வார்த்தை மாத்திரம் சொல்லிவிடும்
என் பணியாளன் குணமடைவான்"

இயேசு
தூரத்தில் புள்ளியாய் தெரிந்த
தளபதியை நோக்கினார்
நம்பிக்கையில் அவன்
மலையாய் தென்பட்டான்

தளபதி திரும்பி
படுக்கையில் இருந்த
பணியாளனை பார்த்தான்
அவனோ எழுந்திருந்து
பழரசம் அருந்திக் கொண்டிருந்தான்

ஒரு வார்த்தை
நம்பிக்கையே நன்மருந்து.

-மகேன் 07.12.06

பயணம் தொடரும்..